# ஈரோடு மாவட்டம் – கொடுமுடி பேரூராட்சி

## குறுகிய கால மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (மூன்றாவது அழைப்பு)

## **அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011**

ந.க.எண்: 72/2010 நாள்: 07.06.2010

ஈரோடு மாவட்டம், கொடுமுடி பேரூராட்சியில் **2010-2011** ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மூடி முத்திரையிடப்பட்ட மறுஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. மூடி முத்திரையிடப்பட்ட மறுஒப்பந்தப்புள்ளிகள் கொடுமுடி பேரூராட்சியின் சார்பாக அதன் செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 16.06.2010 ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

மறுஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உரைகளில் வைத்து உரையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட வேண்டும். வரப்பெற்ற மறுஒப்பந்தப்புள்ளிகளை 16.06.2010 ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பேரூராட்சியின் செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் திறந்த பரிசீலனை செய்யப்படும் வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 15.06.2010 ம் தேதி செவ்வாய் பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி படிவக்கட்டணம் | | | | ஒப்பந்தப் புள்ளி டேவணித் தொகை ரூ. | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒப்பந்தப் புள்ளி படிவ கிரய தொகை ரூ. | விற்பனை வரி ரூ. (ST) | விற்பனை வரி மேல்வரி ரூ. (SC) | மொத்தம் | | |
| 1 | கொளத்துப் பாளையம் புதூர் அரச்சலூர் – கரூர் சாலை முதல் சுடுகாடு வரை தார்சாலை அமைத்தல் | 3.85 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 7700.00 | **3** மாதங்கள் |
| 2 | கொடுமுடி நத்தமேடு பழைய ஈ.பி.ஆபிஸ் வீதியில் தார்சாலை அமைத்தல் | 2.20 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 4400.00 | **3** மாதங்கள் |
| 3 | கொடுமுடி காங்கயம் ரோடு ரோஜா நகர் வீதி தார்சாலை அமைத்தல். | 4.10 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 8200.00 | **3** மாதங்கள் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | கொடுமுடி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல் | 15.00 | 6000.00 | 900.00 | 90.00 | 6990.00 | 30000.00 | 9 மாதங்கள் |
| 5 | கணபதி பாளையம் காளிங்கராயன் வாய்க்கால் கரையில் படித்துறை அமைத்தல். | 2.00 | 600.00 | 90.00 | 9.00 | 699.00 | 4000.00 | 2 மாதங்கள் |
| 6 | கொடுமுடி காவிரி கரையில் குளிப்பதற்கு பாதுகாப்பு கம்பி கட்டுதல் | 2.00 | 600.00 | 90.00 | 9.00 | 699.00 | 4000.00 | 2 மாதங்கள் |
| 7 | கொடுமுடி பள்ளர் தெரு புகளூரான் வாய்க்காலில் படித்துறை அமைத்தல் | 1.50 | 600.00 | 90.00 | 9.00 | 699.00 | 3000.00 | 2 மாதங்கள் |
| 8 | தளுவம் பாளையம் குப்புச்சி கவுண்டர் சந்தில் கான்கரீட் தளம் அமைத்தல் | 2.10 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 4200.00 | 3 மாதங்கள் |
| 9 | கணபதி பாளையம் சின்னப்பகவுண்டர் வீதியில் கான்கரீட் தளம் அமைத்தல் | 3.40 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 6800.00 | 3 மாதங்கள் |
| 10 | கொடுமுடி தினசரி சந்தையில் வணிக வளாகம் அமைத்தல் | 10.70 | 6000.00 | 900.00 | 90.00 | 6990.00 | 21400.00 | 9 மாதங்கள் |
| 11 | கணபதி பாளையம் மயானம் மேம்பாடு செய்தல் | 5.50 | 3000.00 | 450.00 | 45.00 | 3495.00 | 11000.00 | 6 மாதங்கள் |
| 12 | கொடுமுடி சோளக்காளி பாளையம் வீதியில் நவீன கழிப்பிடம் அமைத்தல் | 4.25 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 8500.00 | 6 மாதங்கள் |
| 13 | கொடுமுடி காங்கயம் ரோடு மாரிமுத்து செட்டியார் வீதியில் வடிகாலுடன் கான்கரீட் தளம் அமைத்தல் | 3.85 | 1500.00 | 225.00 | 23.00 | 1748.00 | 7700.00 | 3 மாதங்கள் |

## நிபந்தனைகள்

1. டெண்டர் போட விரும்புவோர் பட்டியலில் கண்டுள்ள வேலைக்கு மறுஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகையாக அதன் எதிரே குறிப்பிட்ட தொகையினை இவ்வலுவலகத்தில்

ரொக்கமாக 16.06.2010 ம் தேதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்குள் செலுத்திய இரசீதினை டெண்டருடன் இணைக்கப்பட வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் பேரூராட்சியில் பதிவு பெற்று ஆண்டு தோறும் புதிப்பிக்கபட்ட ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத மறுஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் மறுஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. செலுத்தப்படும் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது டேவணித் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும்.
5. பெறப்படும் மறுஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து மறுஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணமும்கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ, செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
6. ஒப்பந்தாரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணம் இல்லாமல் விலக்கிக் கொண்டால், டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும் அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
7. மறுஒப்பந்தப்புள்ளிகளை மூடிமுத்திரையிட்ட உறைக்குள் வைத்து உறையின்மீது எந்த வேலைகுரிய மறுஒப்பந்தப்புள்ளி டெண்டர் தேதி நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர் கொடுமுடி பேரூராட்சி என்ற முகவரி இட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.
8. வேலை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலை உத்திரவினை ரத்து செய்யவும் அபராதம் விதிக்கவும் செயல்அலுவலருக்கு அங்கீகாரம் உண்டு. இதனால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவார்கள்.
9. மறுஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள **8-ம்** பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தாரரின் வைப்புத்தொகைகளையும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்
10. குறிப்பிட்ட தேதியில் வேலை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித்தொகையை பறிமுதல் செய்ததாக கருதப்படும். பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
11. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப்பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்ததாரர்கள் சேகரித்திடல்

வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் பேரூராட்சி பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்

12. வேலை முடிந்த பின்னர் பட்டியலில் கீழ்க்கண்ட தொகையை கழித்துகொடுக்கப்பட்டு மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | |
|---|---|
| கூடுதல் வைப்புத் தொகை | 5% |
| வருமான வரி | 2% |
| வருமான வரி மேல் வரி | 10% |
| கல்வி சேவை வரி (வருமான வரி + மேல் வரி) | 3% |
| விற்பனை வரி | 2% |
| விற்பனை மேல் வரி | 10% |
| கட்டிட தொழிலாளர் நல நிதி | 0.3% |

13. மறு டெண்டர் கோரும் நாளை, நிர்வாக நலன் கருதி, எக்காரணமும் காண்பிக்காமல், தள்ளி வைக்கவோ, அல்லது மீண்டும் மறுடெண்டர் கோரவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
14. பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு மறுடெண்டர் உறுதி செய்யப்படும்.
15. மறுடெண்டர் அங்கீகரிக்கப்பட்டு வேலை உத்திரவு பெற்ற ஒரு வார அவகாசத்திற்குள் ரூ.**20/-** மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
16. ஒப்பந்ததாரர் தமது சொந்த செலவில் வேலை துவங்கும் முன் பணியின் நிலை, பணி நடைபெறும் ஒவ்வொரு கட்டத்தின் போதும், பணி முடிவுற்ற பின் உள்ள நிலை ஆகிய அனைத்து நிலைகளையும், இரண்டு நகல்கள் புகைப்படம் எடுத்தும், அப்புகைப்படங்களை குறுந்தகட்டில் பதிவு செய்தும் உடனுக்குடன் செயல் அலுவலர் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
17. ஒப்பந்ததாரர் தமது சொந்த செலவில் பணி துவங்கும் முன் திட்டத்தின் பெயர், பணியின் பெயர் மற்றும் ஆண்டு, மதிப்பீட்டுத் தொகை, ஒப்பந்ததாரர் பெயர், பணி துவங்கப்பட்ட நாள் மற்றும் முடிவுறும் நாள் ஆகிய விபரங்கள் அடங்கிய பெயர் பலகையினை பணி நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் பார்வையில் படும்படி அமைக்கப்பட வேண்டும்.
18. இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான தொகையினை 15.06.2010 ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்குள் ரொக்கமாக இவ்வலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
19. அரசிடமிருந்து அவசர கால உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அவ்வுத்திரவின்படி விதிமுறைகள் செயல்படுத்தப்படும்.
20. இந்த மறுஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

குறிப்பு

மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் 10.00 இலட்சத்திற்குள் உள்ள திட்டப்பணியின் மறுஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளத்தில் இருந்தும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள திட்டப்பணியின் மறுஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://tenders.tn.gov.in என்ற இணைய தளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செயல் அலுவலர், 7-6-2010
கொடுமுடி பேரூராட்சி.
7/6/2010

பெறுநர்

கொடுமுடி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

நகல்

1. அலுவலக விளம்பரப்பலகைக்கு,
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. பேரூராட்சி உதவி இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகம் ஈரோடு –11
5. உதவி பொறியாளர், பேரூராட்சி தொகுதி, கொடுமுடி
6. கொடுமுடி பேரூராட்சி தலைவர் அவர்களின் மேஜைக்கு
7. கொடுமுடி பேரூராட்சி உபதலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும்.
8. செயல் அலுவலர், சென்னசமுத்திரம், ஊஞ்சலூர், வெங்கம்பூர், கிளாம்பாடி, பாசூர், வெள்ளோட்டாம்பரப்பு, அவல்பூந்துறை, சிவகிரி, கொல்லன்கோவில், முத்தூர், மொடக்குறிச்சி ஆகிய பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய
9. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், கொடுமுடி, மொடக்குறிச்சி, வெள்ளகோவில், காங்கயம் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.
10. செயல் அலுவலர், அருள்மிகு.வீரநாராயண பெருமாள் திருக்கோவில் கொடுமுடி, அருள்மிகு.வரதராஜ பெருமாள் வகையறா திருக்கோவில் வெங்கம்பூர்.
11. கிராம நிர்வாக அலுவலர், கொடுமுடி ‘அ’ கிராமம், கொடுமுடி ‘ஆ’ கிராமம்